1971 டிசம்பர் 15]

(இ) ஆம். இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி ஏற்பாடு செய்த கண்டனக் கூட்டம் ஒன்று 2—9—1971-ல் நடைபெற்றது. ஆனுல். கூட்ட நாளன்ருே அதன் பின்னரோ பேரூராட்சி நிர்வாக அதிகாரிக்கு முறையீடு ஏதும் வந்து சேரவில்லை.

(உ) இவ்வினு எழவில்லை.

திரு. கே. டி. கே தங்கமணி : இம்மாதிரியாக வெளியேற்றப் படக்கூடிய நேரத்திலே சில குறிப்பிட்ட கட்சிகளைச் சேர்ந்த வர்களைத் தனிமைப்படுத்தி அவர்களை மட்டும் வெளியேற்றுகின்ற நிலைமை இருக்கின்றதே அம்மாதிரி வராத அளவுக்கு அரசு பார்த்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த இடம் சிலபல ஆண்டுகளுக்கு முன்பே ஆக்கிரமிக்கப்பட்டு முறைப்படி அவர்கள்—அந்த இடம் கழிவிடத்திற்காக ஒதுக்கப் படவேண்டுமென்ற காரணத்தினல்—வெளியேற்றப்பட்டார்கள். ஆனுல் மறுபடியும் அங்கே ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டதன் காரணமாக அவர்களை அகற்றவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. திருப்பத்தூர் தாசில்தார் முன்னிலையிலும், சிங்கம்புனரி காவல் துறை அதிகாரி முன்னிலையிலும் அகற்றப்பட்டார்கள். அவர் களிடத்திலே ஒரே சமாதான உடன்படிக்கையின் மூலமாக வேறு இடம் பார்த்துக்கொள்ளலாம், இந்த இடம் அவசியமாகத் தேவைப்படுகிறது என்று சமாதான முடிவு ஏற்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

சீருணிப்படையினரின் பணிகள்

* 406 வினு.—**திரு. ரா. ரா. முனுசாமி :** மாண்புமிகு தொழி லாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

1971 ஆகஸ்டு திங்கள் 19-ஆம் நாளன்று சென்னை மாநகரில் மேற்கொள்ளப்பட்ட போக்குவரத்து ஆய்வுப் பணிக்கு சீருணிப் படையினரின் உதவி கேட்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இல்லை.

* 407 வினு.—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) சென்னை நகரில் சீருணிப் படையினர் மூலம், பஸ் பயணிகள் நிற்பதற்கான நிழற்குடைகள் தற்போது எத்தனை கட்டப்பட்டுள்ளன ?

(இ) அவற்றிற்கு ஆன செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) 48 நிழற் குடை களுக்கு ஏற்பாடு செய்து 28 அமைக்கப்பட்டு விட்டன.

(இ) 28 நிழற்கொடைகளுக்கு ஆன செலவு ரூ. 35,500.